# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report












## සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව
## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
## Department of Animal Production and Health

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# ANNUAL PERFORMANCE REPORT

# 2019

සත්ත්ව නිෂ්පාදන හා සෞඛ්‍ය දෙපාර්තමේන්තුව
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
**Department of Animal Production and Health**
**Peradeniya**
**Sri Lanka**
**Tel : 94 - 081 – 2388337 / 2388462**
**Fax : 94 – 081 - 2388619**
**Web Site: www.daph.gov.lk**

## உள்ளடக்கம்


பக்க இல.

**1.** நிறுவனத்தின் சுயவிபர செயற்பாட்டை மேம்படுத்தலின் சுருக்கம்.

**1.1** அறிமுகம் 01

**1.2.** நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம் 01

**1.3.** பிரதான செயற்பாடுகள 02

**1.4.** நிறுவன கட்டமைப்பு 04

**1.5.** கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிரதான அலகுகள் 06

**1.6.** திணைக்களத்தின் ஒவ்வொறு அலகுகளின் கீழும் உள்ள நிறுவனங்கள் 06

**1.7.** வெளிநாட்டு கொடை கருத்திட்டங்களின் தகவல்கள் 06

**2.** முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

**2.1.** 2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் செயலாற்றுகை 07

**2.2.** 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டம். 14

**3. 2019** டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று

**3.1** நிதி செயல்திறன் கூற்று 17

**3.2**. நிதி நிலமைக்கூற்று 18

**3.3.** நிதிப்பாய்ச்சல் கூற 19

**3.4.** *நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள்* 20

**3.5**. வருமானம் ஒன்று திரட்டும் செயற்பாடு 21

**3.6**. ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை பயன்படுத்திக் கொள்கின்ற செயற்பாடு 22

**3.7**. நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏணைய அமைச்சுக்கள்.˙.திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்.˙.மாவட்டச் செயலகம்.˙.மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு 23

**3.8**. நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை 23

**3.9**. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 23

**4.** செயலாற்றுகை சுட்டிகள்

**4.1**. நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி (செயல் திட்டத்தின் அடிப்படையில்) 24

**5**. பேன்தகு அபிவிருத்தி இலக்குகளை (ஸுனுபு) அடையும் செயலாற்றுகை.

**5.1**. அடையாளம் காணப்பட்ட பேன்தகு அபிவிருத்தி இலக்குகள 24

**6**. மனித வள விபரம

**6.1**. பதவியணி முகாமைத்துவம் 25

**6.2**. பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செயலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாக குறிப்பிடுக. 25

**6.3.** மனித வள அபிவிருத்தி 26

**7**. இணக்கப்பாட்டு அறிக்கை 32

8. *பின்னிணைப்பு I -* கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# காலநடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்
# செலவு தலைப்பு இலக்கம் - 292

## 1. நிறுவனத்தின் சுயவிபர செயற்பாட்டை மேம்படுத்தலின் சுருக்கம்.

### 1.1. அறிமுகம்

1978 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்கான பிரதான அரச நிறுவனம் ஒன்றாகும். அது மஹவலி, கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. அவ்வாறே கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நாட்டில் ஏற்படுகின்ற கால்நடை நோய்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் போன்றவற்றிற்காக சட்டரீதியில் உருவாக்கப்பட்ட ஒரு தேசிய நிறுவனமாகும். அத்துடன் இத்துறையில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி, தொழில்நுட்பத் தலைமைத்துவத்திற்கான ஏற்பாடுகள், மற்றும் கால்நடை இனவிருத்தி நடவடிக்கைகள் பொருட்டு விஷேட ஆலோசணைகள் மற்றும் உதவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக சட்டரீதியான அதிகாரத்தை கொண்டுள்ள ஒரு தேசிய நிறுவனமாகும். தீவு முழுவதையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகின்ற வேறு பிரதான நடவடிக்கைகளுல் கால்நடை வளர்ப்பு தொடர்பில் பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல், இத்துறையை மேம்படுத்தும் பொருட்டு உரிய கருத்திட்டங்களை தயாரித்தல், பொருளாதார மதிப்பீடு மற்றும் விஷேட அபிவிருத்தி திட்டங்கள் என்பனவாகும். கால்நடைவள துறையில் அபிவிருத்தி வசதிகளை திட்டமிடுவதன் பொருட்டு இத்திணைக்களத்தினால் சட்டங்களை கொண்டு செயற்படுத்தப்படுகின்றன. மாகாண சபைகளினது உருவாக்கத்துடன் கா.உ.சு.திணைக்களத்தின் வெளிக்கள செயற்பாடுகள் 9 மாகாண கா.உ.சு.திணைக்களத்தின் பால் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தேசிய கா.உ.சு. திணைக்களத்தினால் தொழில்நுட்ப தலைமைத்துவம், நிபுனத்துவச் சேவை, மற்றும் உதவி சேவை என்பவற்றை மா.கா.உ.சு. திணைக்களம் வழங்குவதன் மூலம் கால்நடை துறையில் பாரிய செயற்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிருக வைத்திய பணிமனைகள் மிருக வைத்தியர்களினால் முகாமை செய்யப்படுகின்றன. இதுவே கா.உ.சு.திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாகும். 337 பிரதேச மிருக வைத்திய பணிமனைகள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன. இப்பணிமனைகள் மா.கா.உ.சு.திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்றன. சகல கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சிகளும் இதன் மூலம் செயற்படுத்தப்படுகின்றன.

### 1.2. நிறுவனத்தின் இலக்கு, செயற்பணி, நோக்கம்

### 1.2.1. இலக்கு

இலங்கையில் சமூக பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கால்நடைத் துறையில் முதன்மை நிறுவனமாக இருத்தல்.

### 1.2.2. செயற்பணி

கால்நடைகளின் ஆரோக்கியத்தை பராமரித்தல், உற்பத்தியை அதிகரித்தல் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் உணவு முன்னேற்பாட்டிற்கு பங்களிப்பு செய்தல் என்பவற்றினூடாக கால்நடைத் துறையில் நிலையான அபிவிருத்தியை அடைவதற்கு தொழில்நுட்ப வழிகாட்டலினையும் ஆதரவினையும் வழங்குதல்.

### 1.2.3. நோக்கம்

- ❖ திறனான நோய்த்தடுப்பு முறையினை உறுதிப்படுத்துதல் மற்றும் கால்நடை துறையில் தேகாரோக்கியமான கால்நடை எண்ணிக்கையை பராமரித்தல் மற்றும் பொதுச் சுகாதாரம்.
- ❖ விலங்கு மரபனு வளங்களினது உச்சப்பயன்பாட்டினை மேம்படுத்துதல்
- ❖ தரமான விலங்குணவு மற்றும் ஊட்டல் வளங்களின் பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- ❖ விலங்கு உணவு தொழிலின் மேம்பாடு மற்றும் அபிவிருத்தியை பிரபல்யப்படுத்துதல்.
- ❖ நிலையான கால்நடை அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு ஆய்வு அபிவிருத்திகளை மேற்கொள்ளல்.
- ❖ தொழில்நுட்ப திறன்வாய்ந்த மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்
- ❖ திறனாக அவ்வாறே திறனான தகவல்களை வினியோகித்தல் மற்றும் தொழில்நுட்ப சேவை வழங்குதலை உறுதி செய்தல்
- ❖ துறைரீதியான பங்குபற்றுகையுடன் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளினை அமைத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- ❖ விலங்கு மூலங்களின் உற்பத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
- ❖ சிறந்த கால்நடை வளர்ப்பு செயன்முறையை மேம்படுத்துதல் வசதிகள் வழங்குதல்.
- ❖ கால்நடைகளது நலனோம்பலை உறுதிப்படுத்துதல்.
- ❖ திணைக்களச் செயற்பாடுகளின் திறனான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்துதல்.

### 1.3. பிரதான செயற்பாடுகள்

- ❖ உயர்ந்த உற்பத்தி இயலுமையுடன் உயர்ரக மாடு மற்றும் ஆடு விந்து உற்பத்தி செய்வது உட்பட தேசிய செயற்கைமுறை சினைப்படுத்தல் சேவையினை ஒருங்கினைத்தல்
- ❖ இனவிருத்தி நடவடிக்கைகள் பொருட்டு விலங்குகளின் வம்சாவளி மற்றும் செயலாற்றுகையினை அறிக்கை செய்தல்.
- ❖ விலங்கு மரபனு வள பாதுகாப்பு
- ❖ ஆடுகளின் இனத்தை மேம்படுத்துதல்
- ❖ இளம் பசுக்களை உருவாக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துதல்.
- ❖ போசனைப் புல் மற்றும் சைலேஜ் உற்பத்தி மற்றும் புல் சந்தைப்படுத்தல் என்பவற்றை பிரபல்யப்படுத்துதல்.
- ❖ நோய் தடுப்பூசியை தேசிய வேலைத்திட்டமாக செயற்படுத்ததுல்.
- ❖ உள்நாட்டு தடுப்பூசி (கால்வாய், கருங்காலிநோய், தொண்டையடைப்பான், ரெனிகட்) மற்றும் ஏனைய உயிர்ப்பொருள் உற்பத்தி செய்தல்
- ❖ மடியழற்சி நோயினை தடுத்தல் மற்றும் குனப்படுத்தல்
- ❖ சல்மொனெல்லோசிஸ்ட் மற்றும் ரெனிகேட் நோய்களை கட்டுப்டுத்துதல்.
- ❖ விரைவாக பரவும் பறவைக் காய்ச்சலுக்கு எதிராக திறனான முன் அனர்த்த மதிப்பீட்டை உருவாக்கல்
- ❖ கால்நடை நோய் இனங்காணல் இயலுமையை மேம்படுத்தும் பொருட்டு கால்நடை புலனாய்வு நிலையங்களை வலுப் பெறச் செய்தல்
- ❖ பாற் பண்ணைகளில் சுகாதார மட்டத்தின் மேம்படுத்துதல்.
- ❖ ஆய்வுகூட வசதிகள் மேம்படுத்துதல் மற்றும் தேவைப்பாடுகளை வழங்குதல்.
- ❖ பால் தொழில்நுட்ப ஆய்வுகூட வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு
- ❖ கால்நடைவள துறையின் பொருட்டு ஆராய்ச்சி மற்றும் ஆலோசணை சேவைகளை வழங்குதல்
- ❖ கள மட்டத்தில் கால்நடைகளை இனங்காணல்
- ❖ உள்நாட்டு சந்தையில் உயர்தரமான கால்நடை உயவு கிடைக்கப் பெறுவதை உறுதி செய்தல்.
- ❖ கால்நடை உற்பத்தி மற்றும் உயிர் பொருள் ஒழுங்கமைப்பு

- ❖ கோழி வளர்ப்பு துறைக்கு உரிய ஒழுங்கு நடவடிக்கைகள்
- ❖ கால்நடை தொற்று நோய் தடுப்பு மற்றும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைள்
- ❖ சர்வதேச வர்த்தகத்தை இலகுபடுத்துதல்.
- ❖ தொற்று நோய் தடுப்பு அலகுகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதுல் மற்றும் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல்
- ❖ கால்நடைவள ஆராய்ச்சி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்
- ❖ கால்நடை வள டிப்ளோமாதாரிகளை உருவாக்குவதன் பொருட்டு விலங்கு பரிபாலன பாடசாலை (கரந்தகொல்லை/சீப்புக்குளம்) நடாத்துதல்
- ❖ கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் தொடர்கல்வி நிலையத்தில் பயிற்சி மற்றும் கல்வி வேலைத்திட்டங்களை நடாத்துதல்.
- ❖ மின்னியல், அச்சு ஊடகங்கள் மற்றும் கண்காட்ச்சிகளின் ஊடாக தகவல்களை வினியோகித்தல்
- ❖ மாதிரி பண்ணை அலகொன்றினை காட்ச்சிப்படுத்துதல்
- ❖ விலங்கு தொழில்நுட்ப காட்சியகத்தில் வெவ்வேறு பண்ணை அலகுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல்
- ❖ கால்நடைவள துறையில் சமூக பொருளாதார தாக்கம் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளல்.
- ❖ கால்நடைவள புள்ளிவிபர அறிக்கை தயாரித்தல் மற்றும் வினியோகித்தல்
- ❖ மிருக வைத்திய சேவையினை விரிவாக்குவதன் பொருட்டு மிருக வைத்திய பணிமனை ஸ்தாபித்தல்

## 1.4 நிறுவன கட்டமைப்பு




**Other Staff :** BA, DO, DA, Le.Ass, Pro.Ass., Pro.Ass.Com, TO, Drftm, RA, PMA, LIB, LDO
Dri, Tra.Ope., LA, Mech, BO, Car, Elec, Ban.Kee, Watc, CatC, MM, GtC, AnC, Grs, O.E.S, Liv.Ass, GL, SL, FA

| | |
|---|---|
| DG | - பணிப்பாளர் நாயகம் |
| ADG | - மேலதிகப் பணிப்பாளர் நாயகம் |
| D/AD | - பணிப்பாள், நிர்வாகம் |
| D/VRA | - பணிப்பாளர், கால்நடை ஒழுங்கமைப்பு விவகாரம் |
| D/LPE | - பணிப்பாளர் கால்நடை திட்டமிடல் பொருளாதாரம் |
| D/HRD | - பணிப்பாளர் மனித வள அபிவிருத்தி |
| D/AB | - பணிப்பாளர், கால்நடை இனவிருத்தி |
| D/VR | - பணிப்பாளர் கால்நடை ஆராய்ச்சி |
| D/AH | - பணிப்பாளர் கால்நடை சுகாதாரம் |
| CA | - பிரதான கணக்காளர் |
| CLE | - பிரதான கால்நடை பொருளாதாரம் |
| CE | - பிரதான நோய் தடுப்பாளர் |
| VPH.SP | - கால்நடை பொது சுகாதார நிபுனர் |
| P.SC | - மூல விஞ்ஞானி |
| DE.SP | - பால் பொறியியல் நிபுனர் |
| Vet.In.Sp | - கால்நடை பலனாய்வு நிபனர் |
| C.Vac | - பிரதான தடுப்பூசியியலாளர் |
| R/AF | - பதிவாளர், விலங்கு தீவனம் |
| R/VD | - பதிவாளர், கால்நடை மருந்து |
| CAQO | - பிரதான விலங்கு தனிமைப்படுத்தல் உத்தியோகத்தர் |
| AB.Sp | - விலங்கு இனவிருத்தி நிபனர் |
| VR.Sp | - விலங்கு மீன் உற்பத்தி நிபுனர் |
| C.Agro | - பிரதான விவசாயவியலாளர் |
| CIA | - பிரதான உள்ளக கணக்காளர் |
| Acct | - கணக்காளர் |
| DD/AH | - பிரதிப் பணிப்பாளர், விலங்கு சுகாதாரம் |
| DD/VR | - பிரதிப் பணிப்பாளர், மிருக ஆராய்ச்சி |
| DD/R | - பிரதிப் பணிப்பாளர், ஆராய்ச்சி |
| DD/TS | - பிரதிப் பணிப்பாளர், தொழில்நுட்ப சேவை |
| DD/LPE | - பிரதிப் பணிப்பாளர், விலங்கு திட்டமிடல் பொருளாதாரம் |
| DD/HRD | - பிரதிப் பணிப்பாளர், மனிதவள அபிவிருத்தி |
| DD/AB | - பிரதிப் பணிப்பாளர், கால்நடை இனவிருத்தி |
| DD/DD | - பிரதிப் பணிப்பாளர், பால் அபிவிருத்தி |
| LE | - கால்நடை பொருளியலாளர் |
| AD.Ad | - உதவிப் பணிப்பாளர், நிர்வாகம் |
| SVP | - தடுப்பூசி உற்பத்தி அத்தியட்சகர் |
| AQO | - விலங்கு தனிமைப்படுத்தல் உத்தியோகத்தர் |
| VRO | - மிருக ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| VIO | - கால்நடை புலனாய்வு உத்தியோகத்தர் |
| VS | - மிருக வைத்தியர் |
| LO | - கால்நடை உத்தியோகத்தர் |
| RO | - ஆராய்ச்சி உத்தியோகத்தர் |
| Leo | - சட்ட உத்தியோகத்தர் |

| | |
|---|---|
| Eng | - பொறியியலாளர் |
| AO | - நிர்வாக உத்தியோகத்தர் |
| RA/S | - ஆய்வு உதவியாளர் விஷேட |
| LPO | - கால்நடை மேம்பாட்டு உத்தியோகத்தர் |
| Trl | - மொழிபெயர்ப்பாளர் |
| I&CTO | - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| SO | - புள்ளிவிபரவியலாளர் |
| ஏனைய பதவியனியினர் | |
| BA | - வரவு செலவு திட்ட உதவியாளர் |
| DO | - அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| DA | - அபிவிருத்தி உதவியாளர் |
| Le.Ass | - சட்ட உதவியாளர் |
| Pro.Ass | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| Pro.Ass(com) | - நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (தொடர்பாடல்) |
| TO | - தொழில்நுட்ப உத்தியோகத்தர் |
| Draft | - படவரைகளைஞர் |
| RA | - ஆராய்ச்சி உதவியாளர் |
| PMA | - அரச முகாமை உதவியாளர் |
| LIB | - நூலகர் |
| LDO | - கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| Dri | - சாரதி |
| Tra.ope | - டெரக்டர் இணக்குனர் |
| LA | - ஆய்வுகூட உதவியாளர் |
| Mech | - பொறியியலாளர் |
| BO | - புரோய்லர் இயக்குனர் |
| Car | - தச்சன் |
| Elec | - மின்சாரவியலாளர் |
| Ban.Kee | - வங்களா காப்பாளர் |
| Watch | - காவளாளி |
| Catch | - மந்தை பாதுகாவல் |
| MM | - பால் கறப்பவர் |
| Gtc | - ஆடு பராமரிப்பாளர் |
| Anc | - கால்நடை பராமரிப்பாளர் |
| Grs | - புல் வெட்டுனர் |
| OES | - அலுவலக ஊழியர் சேவை |
| Liv.Assi | - கால்நடை உதவியாளர் |
| GL | - தோட்ட தொழிலாளி |
| SL | - சுத்திகரிப்பு தொழிலாளி |
| FA | - கள உத்தியோகத்தர் |

### 1.5. கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பிரதான அலகுகள்

- கால்நடை இனவிருத்தி அலகு
- கால்நடை சுகாதார அலகு
- கால்நடை சட்ட ஒழுங்கு அலகு
- கால்நடைவள திட்டமிடல் மற்றும் பொருளாதார அலகு
- மனிதவள அபிவிருத்தி அலகு
- மிருக ஆராய்ச்சி நிறுவனம்
- நிதி அலகு
- நிர்வாக அலகு

### 1.6. திணைக்களத்தின் ஒவ்வொரு அலகுகளின் கீழும் உள்ள நிறுவனங்கள்

- கால்நடை இனவிருத்தி அலகு
  செயற்கை முறை சினைப்படுத்தல் அலகு (குண்டசாலை, பொலன்னறுவை)
  ஆடு இனவிருத்தி நிலையம் (தெலஹர, இம்புலன்தண்ட)
- கால்நடை சுகாதார அலகு
  கால்நடைப் புலனாய்வு நிலையம் (25)
- கால்நடை சட்ட ஒழுங்கு அலகு
  விலங்கு தொற்றுநோய் தடுப்பு நிலையம் (கொழும்பு, கட்டுநாயக்க, மத்தளை, யாழ்ப்பாணம்)
- மனிதவள அபிவிருத்தி அலகு
  விலங்கு பரிபாலன பாடசாலை (கரந்தகொல்லை, சீப்புக்குளம்)
  தொடர்கல்வி நிலையம் - கண்ணொறுவை
  கால்நடை தொழில்நுட்ப காட்ச்சியகம் - கண்ணொறுவை
- மிருக ஆராய்ச்சி நிறுவனம்
  மத்திய கோழி ஆராய்ச்சி நிலையம் (கரந்தகொல்லை)
  கால்நடை நச்சியியல் அலகு - பொல்கொல்ல
  பால் உற்பத்தி ஆய்வுகூடம் - கண்ணொறுவை

### 1.7. வெளிநாட்டு கொடை கருத்திட்டங்களின் தகவல்கள்

2019 ஆம் அண்டினுள் வெளிநாட்டு கொடை பெறுகின்ற கருத்திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்பட வில்லை.

## 2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2019 ஆம் ஆண்டு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம் (டிசம்பர், 31)

| *இல* | *வேலைத்திட்டம் /கருத்திட்டம்* | *2019 வரவு செலவு திட்ட ஒதுக்கீடு* | *பௌதீக முன்னேற்றம் (%)* | *நிதி முன்னேற்றம் (ரூ.மி.)* | *விஷேட காரணம்* |
|---|---|---|---|---|---|
| 1. | சமூக பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் | 2.00 | 100 | 2.00 | |
| 2. | தரப்பாதுகாப்பு வேலைத்திட்டம் | 1.00 | 89 | 1.00 | |
| 3. | கால்நடைகளின் தொற்று நோய்களை தடுக்கும் வேலைத்திட்டம் | 43.00 | 95 | 38.70 | |
| 4. | கால்நடை ஆராய்ச்சி வேலைத்திட்டம் | 30.00 | 91 | 25.98 | |
| 5. | கால்நடை இனவிருத்தி வேலைத்திட்டம் | 160.00 | 98 | 159.99 | |
| 6. | கால்நடைவள பிரள்யப்படுத்தும் வேலைத்திட்டம் | 4.70 | 85 | 4.70 | |
| 7. | பசுக்கன்றுகளை அதிகரிக்கும் வேலைத்திட்டம் | 50.00 | 94 | 47.75 | |
| 8. | மிருக வைத்தியப் பணிமனைகளின் சேவை வழங்கலை மேம்படுத்தல் | 141.00 | 84 | 128.36 | |
| 9. | கால்வாய் நோய் தடுப்பூசி உற்பத்தி | 13.50 | 78 | 11.27 | |
| 10. | கால்நடைகளை அடையாளப்படுத்தும் வேலைத்திட்டம் | 14.00 | 58 | 13.15 | |
| 11. | கால்நடை தொற்று நோய் தடுப்பு நிலையங்களை விஸ்தரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் | 5.00 | - | 4.99 | 2018 முதல் 2019 வரை முடிவுறாத வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. |
| 12. | புத்தகம் மற்றும் சஞ்சிகை வெளியீடு | 0.30 | 100 | 0.30 | |
| 13. | கால்நடை நோய் தடுப்பை விஸ்தரித்தல் | 20.00 | 100 | 20.00 | |
| 14. | கோழி சுகாதார முகாமையின் ஊடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை செய்து கொடுத்தல் | 4.00 | 78 | 3.80 | |
| 15. | மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம் | 5.00 | 96 | 4.75 | |
| 16. | உயர் தரத்தில் கால்நடை தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல் | 26.50 | 97 | 26.14 | |
| 17. | நீர் வெறுப்பு நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் நாடளாவிய ரீதியிலான வேலைத்திட்டம் (2019.01.18 அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய இந்த கருத்திட்டம் சுகாதார அமைச்சின் கீழ் கையளிக்கப்பட்டது). | 132.00 | - | 132.00 | 2019.01.18 அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய இந்த கருத்திட்டம் சுகாதார அமைச்சுக்கு கையளிக்கப்பட்டது. |
| 18. | வனஜீவி நோய் கண்டறியும் வேலைத்திட்டம் | 47.00 | 75 | 17.59 | |
| 19. | கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் தடுப்பு வசதிகளை மேம்படுத்துதுல். | 47.00 | 86 | 44.28 | |
| 20. | உணவு பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கை வசதிகள் பொருட்டு கால்நடை உணவு மற்றும் கால்நடைகளின் உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்தல் | 11.00 | 100 | 10.45 | |
| 21. | கால்நடை பரிபாலன டிப்ளோமாதாரர்களை உருவாக்கல் மற்றும் இயலுமையை வலுப் பெறச் செய்தல் | 10.00 | 80 | 9.13 | |
| | **மொத்தம்** | **767.00** | | **706.33** | |

## 2.1 2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் செயலாற்றுகை (டிசம்பர் 31 ஆம் திகதிக்கு)

### 2.1.1 கால்நடை வள அபிவிருத்தி

#### 2.1.1.1 கறவை மாடு வளர்ப்பு

**அ). கால்நடைகளின் எண்ணிக்கையை மேம்படுத்தும் பொருட்டு கால்நடைகளின் இனவிருத்தி.**

நாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு உள்நாட்டில் மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கையினை உயர்த்துவதற்காகவும் மற்றும் உள்நாட்டு பால் உற்பத்தியினை மேம்படுத்தவும் அமுல் செய்யப்பட்ட பிரதான நிகழ்ச்சியாக தரமான எருமை விந்துகளை பயன்படுத்தி செயற்கை முறை சினைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன. நாட்டில் பால் உற்பத்தியினை மேம்படுத்துதல், விந்து உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல், செயற்கை முறை சினைப்படுத்தல் தொழில்நுட்பவியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல், புல்/வெட்டும் புல் உற்பத்தி ஆகியவற்றில் பயிற்சி வழங்குதல் என்பன இந்நிகழ்ச்சி நிரலில் காணப்படும் பிரதான செயற்பாடுகளாகும்.

| *மீளாய்வு காலப்பகுதியினள் கால்நடை இனவிருத்தி வேலைத்திட்டத்தின் செயலாற்றுகை* | |
|---|---|
| குண்டசாலை மற்றும் பொலன்னறுவையில் அமையப் பெற்றுள்ள செயற்கைமுறை சிணைப்படுத்தல் நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட சுக்கில விந்துகளின் அளவு | *337,834* |
| பிரதேச மிருக வைத்திய பணிமனைகளினால் மேற்கொள்ளப்பட்ட செயற்கை முறை சினைப்படுத்தல்களின் எண்ணிக்கை | *211,356* |
| வெளிக்கல மிருக வைத்தியர்களினால் பசுக்கள்/இளம் பசுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சினைப்படுத்தல்களின் எண்ணிக்கை | *72,447* |
| பிறந்த கன்றுகளின் எண்ணிக்கை | *66,157* |

**ஆ). இளம் பசுக்களின் உற்பத்தி நிகழ்ச்சி**

செயற்கைமுறை சினைப்படுத்தலினூடாக தொடர்ந்தும் பயனை அடைந்துக் கொள்வதன் பொருட்டும் தேசிய பால் உற்பத்தியை அதிகாரித்துக் கொள்வதற்காககவும் செயற்கை முறை சினைப்படுத்திலன் ஊடாக பிறக்கின்ற பெண் கன்றுகளின் முறையான முகாமைத்துவம் பண்ணை மட்டத்தில் பிரதானமாக பாதிக்கப்படுகின்ற பிரச்சினையாகும். நாட்டினுள் இனவிரத்திக்கு பொருத்தமான இளம் பசுக்களின எண்ணிக்கை யை அதிகரிப்பதற்கும் அதன் ஊடாக உள்நாட்டு பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் செயற்கை முறை சினைப்படுத்தலினால் பிறக்கின்ற பெண்கன்றுகளை பதிவு செய்து தொழில்நுட்ப மதியுனர் சேவையினை வழங்குதல், உள்ளீடுகள் வழங்குதல் மற்றும் பால் உற்பத்தியை அதிகரித்தல் என்பவற்றினை அடைந்து கொள்வதற்காகவே இந்நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்படுகின்றது. இந்நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இக்காலப்பகுதியில் 16,042 இளம் பசுக்கள் பதிவு செய்யப்பட்டன.

**இ). மடியழற்சி நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

மடியழற்சி நோயை 30% இல் இருந்து 1% ஆக குறைப்பதன் ஊடாக 25% உற்பத்தி மேம்படுத்துவதன் நோக்கில் இவ்வேலைத்திட்டம் 2014 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 2019 மீளாய்வுக் காலப்பகுதியில் இந்நிகழ்சிசித் திட்டத்தின் கீழ் 52,992 பால்மடி கரைசல் உற்பத்தி செய்யப்பட்டது.

### 2.1.1.2 ஆடு வளர்ப்பு

இத்திணைக்களம் தரமான இனப்பெருக்க ஆடுகளின் கேள்விக்கு முகம் கொடுக்கும் வன்னம் முறையே இம்புாலன்தன்ட தெலஹர பிரதேசங்களில் இரண்டு ஆட்டு பண்ணைகளை பராமரித்து வருகின்றது. இக்காலப்பகுதியில் உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் அதிகரிப்பதற்காக ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களுக்கு 98 ஜமுனாபாரி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஆடுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வெளிக்கள மட்டத்தில் 2019 டிசம்பர் மாதத்தின் போது வெளிக்கள மட்டத்தில் 2,712 செயற்கைமுறை சினைப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.1.1.3. கோழி வளர்ப்பு

இந்நாட்டில் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தனியார் துறையின் செயற்பாடுகளை ஒப்பிட்டு பார்க்கையில் அரச துறையின் செயற்பாடுகள் அதன் ஒழுங்கு முறையையும் தரத்தினையும் உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச நாடுகளில் காணப்பட்ட அதி தீவிரமாக பரவுகின்ற பறவைக் காய்ச்சல் காரணமாக நாட்டிற்குள் வருகை தரும் பெற்றோர் மற்றும் பெற்றோரது பெற்றோர் பறவைகள் வருகையினை விலங்கு நோய் தடுப்பு உத்தியோகத்தர்களினால் கட்டுப்படுத்தப்பட்டன. அவ்வாறே அவற்றினை இறக்குமதி செய்கின்ற போது இந்நாட்டில் அந்நோய் பரவுவதை தடுப்பதற்காக விமான நிலையத்திலும் துறைமுகத்திலும் அமையப் பெற்றுள்ள விலங்கு நோய் தடுப்பு பணிமனையின் ஊடாக விஷேடமாக நோய் தடுப்பு வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டது.

நாட்டில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகளின் பெற்றோர்களில் தேவைப்பாடு உள்நாட்டு உற்பத்தியின் ஊடாக மற்றும் இறக்குமதி செய்யப்படுவதன் ஊடாகவும் அடையப் பெறுகின்றன. தற்போது இறைச்சிக்காக வளர்க்கப்படும் கோழிகளின் பெற்றோர்களில் தேவைப்பாடு 80.20% இந்நாட்டின் புரோய்லர் பெற்றோர்களின் பெற்றோர்களை உற்பத்தி செய்யும் பண்ணைகள் 03 இல் இருந்து உற்பத்தி செய்யப்பட்டன 2019 டிசம்பர் மாதம் வரை செயலாற்றுகை பின்வருமாறு

| | |
|---|---|
| உள்நாட்டு உற்பத்தி - புரொய்லர் மாபியா பெற்றோரது பெற்றோர்கள் | *1,161,334* |
| இறக்குமதி - புரொய்லர் பெற்றோர்களது பரம்பரைக்கு உரிய விலங்குகள் | *37,116* |
| - புரொய்லர் பெற்றோர்களது பரம்பரைக்கு உரிய விலங்குகள் | *286,707* |
| - முட்டையிடும் பெற்றோர்களது பரம்பரைக்கு உரிய விலங்குகள் | *94,811* |

இனவிருத்திப் பண்ணைகளில் இருந்த இக்காலப்பகுதியில் மொத்தமாக 167.99 மில்லியன் புரோய்லர் குஞ்சுகளும் மற்றும் 7.73 மில்லியன் முட்டை கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவ்வாறே, சிறு அளவிலான கோழி உற்பத்தி பண்ணையாளர்களுக்கு கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் ரெனிகேட் நோய்க்கான தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் மொத்தமாக ரெனிகேட் நோய்க்கு எதிரான தடுப்பூசி 4,104,400 டொஸ்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அத்துடன் ரெனிகேட் நோய்க்கு எதிராக 4,052,769 கோழிகளுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

### 2.1.2. கால்நடை சுகாதரத்தை மேம்பாடு செய்தல்.

**அ). கால்நடைகளின் தொற்று நோயினை கட்டுப்படுத்தல்**

உற்பத்தி மற்றும் திறன் மேம்பாட்டின் பொருட்டு ஆரோக்கியமான கால்நடை எண்ணிக்கைகளை நடாத்திச் செல்வதன் பொருட்டு நாடலாவிய ரீதியில் வெற்றிகரமான முறையில் நோய் தடுப்பு மற்றும் ஒழிப்புச் செய்வதன் பொருட்டு கால்நடை சுகாதார சேவையை பெற்றுக் கொள்வது உச்ச அளவில் முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது. இலங்கையில் பரவுகின்ற கால்நடை தொற்று நோய் பரவுவதை தடுக்கும் பொருட்டு தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டம் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படுகின்றது.

நோய்யெதிர்பு வேலைத் திட்டத்தின் பொருட்டு தேவையாகின்ற கால்வாய் நோய், தொண்டை அடைப்பான், கருங்காலி நோய் மற்றும் பூருசெல்லோசிஸ் தடுப்பூசிகள் கா.உ.சு.திணைக்களத்தின் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் கால்வாய் நோய் பொருட்டு தடுப்பூசி சொட்டுக்கள் 775,000 இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மீளாய்வு காலப்பகுதியினுள் நோய் எதிர்ப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட தடுப்பபுசிகள் மற்றும் நோய் எதிரப்பு பெற்றுக் கொடுக்கப்பட்ட விலங்குகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் பின்வருமாறு

| *தடுப்பூசி வகை* | *தடுப்பூசி அளவு* | *நோய் எதிர்ப்புச் சக்தி வழஙக்கப்படட கால்நடைகளின் எண்ணிக்கை* |
|---|---|---|
| கால்வாய் நோய் | 113,160 | *852,635* |
| தொண்டை அடைப்பான் | 388,872 | *227,635* |
| கருங்காலி நோய் | 263,505 | *124,452* |
| புருசெல்லோசிஸ். | 18,000 | *6,931* |

**ஆ). பறவைக் காய்ச்சல் இந்நாட்டிற்குள் நுழைவதை தடுத்தல்**

ஆசியா நாடுகள் பலவற்றில் பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்துகின்ற பறவைக்காய்ச்சல் அற்ற ஒரு நாடாக இந்நாடு விலங்குகின்றது. இந்நோய் நாட்டினுள் நுழைந்தால் அதனை கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் என முறையான திட்டம் ஒன்றினை கா.உ.சு.திணைக்களம் வகுத்துள்ளது. பல பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் நோய் கண்டறியும் இயலுமை வசதிகளை விஸ்தரித்துள்ளது. தேசிய மற்றும் மாகாண கா.உ.சு. திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு இந்நோயை தொடர்பாக அதனை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல் என்பன தொடர்பில் பயிற்சி கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பறவைக்காய்ச்சல் புலனாய்வு வேலைத்திட்டத்தின் கீழ், மொத்தமாக 19,873 வெளிக்கள மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றுள் நோய் தாக்கம் எதுவும் காணப்படவில்லை.

**இ). நோய்த்தடுப்பு மற்றும் பரிசோதனை சேவைகளினை வலுப்படுத்தல்**

இந்நாட்டிற்கு எவ்விதத்திலேனும் வெளிநாடுகளில் இருந்து விலங்கு நோய் ஒன்று உள்நுழைவதை எதிர்க்கின்ற முதலாவது பாதுகாப்பு முறை கால்நடை தொற்று நோய் தடுப்பு சேவையாகும். இனவிருத்தி கோழிகள் இறக்குமதி செய்ததன் பின்னர் விலங்கு நோயை தடுப்பதற்கும் மற்றும் ஏற்றுமதி சந்தையின் பொருட்டு அழகு மீன் வளர்ப்புத் துறை ஆரோக்கியமானதாகவும் தரம் மிக்கதாகவும் மேம்படுத்தும் நோக்கில் இக்கருத்திட்டம் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

மீளாய்வுக் காலப்பகுதியில் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இக்காலப்பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு நாள் கோழிக் குஞ்சுகள் 57 தொகுதிகள் தொற்றுநோய் தடுப்பு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. மேலும் 120 மீன் பண்ணைகள் பரீட்சிக்கப்பட்டன.

**ஈ). உயர் தரத்தினாலான விலங்கு தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.**
2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தின் ஊடாக உயர் தரத்தினாலான கால்நடை தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வது மேலும் விஸ்தரிக்கப்பட்டன. தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற தடுப்பூசிகளின் தரத்தினை மேம்படுத்துதுல், புதிய தடுப்பூசிகளை புதிதாக உற்பத்தி மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த கருத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு கால்வாய் நோய்,

தொண்டையடைப்பான், கருங்காலி நோய், புருசெலோசிஸ் மற்றும் ரெனிகேட் உட்பட தடுப்பூசிகள் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு தேவையான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**உ). கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் தடுப்பு வசதிகளை மேம்படுத்துதுல்.**
இந்த கருத்திட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட கால்நடைப் புலனாய்வு நிலையங்களில் கோழி மற்றும் மீன் நோய்களை இனங்காணல் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பிரதேசத்தில் மேற்கொள்வதன் பொருட்டு பரீட்சிப்பு நிலையங்களை நவீனப்படுத்தப்படுகின்றன. இந்த கருத்திட்டத்தின் கீழ் 2019 டிசம்பர் மாதம் ஆகின்ற போது நவீனப்படுத்தல் நடவடிக்கைகள் 67% முடிவுருத்தப்பட்டுள்ளன.

### 2.1.3. மனித வள அபிவிருத்தி

**அ). இயலுமையை விருத்தி செய்தல் மற்றும் கல்வி மற்றும் பயிற்சி**

கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் புதிய செயன்முறை கால்நடை வளர்ப்பு நடவடிக்கைள் தொடர்பில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் பண்ணையாளர்களுக்கும் விலங்கு வேளான்மை தொடர்பில் இயலுமை விருத்தி செய்யும் நிகழ்ச்சியினை மேற்கொள்கின்றது. மீளாய்வு காலப்பகுதியின் போது மொத்தமாக 15 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் முயற்சியாளர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பண்ணையாளர்கள் 361 பேர் இதில் கலந்து கொண்டனர்.

கரந்தகொல்லையில் அமையப் பெற்றுள்ள இலங்கை விலங்கு பரிபாலன பாடசாலையின் ஊடாக 67 மாணவர்கள் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.(கல்வி ஆண்டு 2019-2021)

**ஆ). தகவல்களை பரப்புதல்**
முறையே இத் திணைக்களம் 07 தேசிய மட்ட கண்காட்சிகளில் பங்குபற்றியது அவை பின்வருமாறு

| ***கண்காட்சியின் பெயர்*** | ***இடம்*** |
|---|---|
| யொவுன் புரய – 2019 | வீரவில |
| “***Vet Expo – 2019***” கண்காட்சி | BMICH, கொழும்பு |
| “சில்ப சேன” தொழில்நுட்ப கண்காட்சி | BMICH, கொழும்பு |
| “Vision 2025 – Enterprise Sri Lanka”– கண்காட்சி | அனுராதபுரம் |
| “குசி மேலா 2019” – விவசாய கண்காட்சி | ரஜரட்ட பல்கலைக்கழகம், மிஹிந்தலை |
| “Vision 2025 – Enterprise Sri Lanka”– கண்காட்சி | யாழ்ப்பாணம் |
| “சில்ப சேன” தொழில்நுட்ப கண்காட்சி | பொலன்னறுவை |




யொவுன் புரய – 2019



“Vision 2025 – Enterprise Sri Lanka”- யாழ்ப்பாணம்



**Vision 2025 – Enterprise Sri Lanka -**
அனுராதபுரம



“குசி மேலா 2019” – விவசாய கண்காட்சி

இவற்றின் ஊடாக ஏற்கனவே கால்நடை துறையில் பண்ணையாளர்களுக்கும் பாடசாலை மானவர்கள் மற்றும் பொது மக்களுக்கும் கால்நடை துறையில் ஈடுபட்டுள்ள சிறிய நடுத்தர முயற்சியாளர்களுக்கும் புதிய தொழில்நுட்ப தகவல்களினை வழங்கி கல்வியூட்டவும் இத்திணைக்களத்தால் முடிகின்றது. இக்காலப்பகுதியில் மொத்தமாக 26,691 தகவல்கள் அடங்கிய கையேடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் 93 தொலைக்காட்சி வானொலி விளம்பர நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

### 2.1.4. சட்ட முறை செயற்பாடுகள் மற்றும் சேவைகள்

#### அ). கோழிப் பண்ணைகளின் பதிவு

பிரதேச மிருக வைத்தியப் பணிமனைகளில் கோழி வளர்ப்பு பண்ணைகளின் பதிவு 2019 ஆம் ஆண்டிலும் தொடரப்பட்டது. இவ்வாறு பண்ணைகள் பதிவு மேற்கொள்வதினூடாக, பரவு நோய்களினை கட்டுப்படுத்துதல், தொழில்நுட்ப வசதிகள் வழங்குதல் மற்றும் கோழி உற்பத்திகளின் தரம் கட்டுப்பாடு என்பன மிகவும் இலகுவாக மேற்கொள்ளப்படுகின்றன. பிரதேச மிருக வைத்தியப் பணிமனைகளின் ஊடாக 2019 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியின் பொது பிரதேசத்தின் திறந்த கோழிப் பண்ணைகள் மொத்தமாக 29,621 உம் வர்த்தக கோழி பண்ணைகள் 2,172 உம் பதிவு செய்யப்பட்டன. அத்துடன் அவற்றிற்கான இலத்திரனியல் தரவுத் தளம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

#### ஆ). கால்நடைகளை இனங்காணல் மற்றும் மத்திய கால்நடை பண்ணைகளின் தரவுத்தளம் என்பவற்றின் ஸ்தாபித்தல்.

இக்கருத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பண்ணைகளுக்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் விஜயம் செய்வார்கள். அத்துடன் இங்கு கால்நடைகள் காதடையாளம் இடப்படும். இக்காலப்பகுதியில் 105,900 கால்நடைகள் காதடையாளமிடப்பட்டுள்ளன. அடுத்து வரும் காலங்களில் மீதமான விலங்குகள் இனங்காணப்படும்.

இதன் மூலம் மாடுகளது நம்பத்தகுந்த எண்ணிக்கையை கணிப்பிட முடியும். சட்டவிரோதமான கொண்டு செல்லுதல், அறுப்புகள் என்பன தடுக்கப்டும். அத்துடன் எதிர்கால பால் உற்பத்தியை எதிர்வு கூறுதல் திறனற்ற விலங்குகளை நீக்குதல் போன்றன இலகுவில் மேற்கொள்ள முடியும்.

**இ). அரசாங்க மிருக வைத்திய பணிமனைகளில் சேவை வழங்கும் முறைமையினை மேம்படுத்தல்**

கிராமிய கால்நடை சமூகத்தின் தேவைகள் பொருட்டு இத்திணைக்களத்தின் பிரதான செயற்பாட்டு அலகாக அரசாங்க மிருக வைத்திய பணிமனைகள் திகழ்கின்றன. இப்பணிமனைகளில் அமையப் பெற்றுள்ள வசதிகளுக்கு ஏற்ப அடிமட்டத்தில் இருந்து சேவைகள் வழங்கப்படுகின்றன. நோய் கண்டறிதழ், விரிவாக்கல் சேவைகளை திட்டமிடல் பொருட்டு தொடர்பாடல் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஆகக் குறைந்த அளவிலேயே வழங்கப்படுகின்றன.

2017, 2018 ஆம் ஆண்டுகளில் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை மிருக வைத்தியப் பணிமனை, ஹம்பந்தோட்டை மாவட்டத்தில் லுனுகம்வெஹர மிருக வைத்திய பணிமனை இரத்தினபுரி மாவட்டத்தில் அயகம மிருக வைத்திய பணிமனை, மாத்தரை மாவட்டத்தின் பஸ்கொடை மிருக வைத்திய பணிமனை, பொலன்னறுவை மாவட்டத்தின் அரலகன்வில மிருக வைத்திய பணிமனை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுவான்சிக்குடி மிருக வைத்தியப்பணிமனை போன்ற மிருக வைத்தியப் பணிமனைகளின் நிர்மானப்பணிகள் 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது முடிவுருத்தப்பட்டுள்ளன. 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பதுலை மாவட்டத்தின் ஹாலிஎல மிருக வைத்திய பணிமனையின் நிர்மான வேலைகள் 40% முடிவுருத்தப்பட்டுள்ளதுடன் அது 2020 ஆம் ஆண்டின் முடிவுறா வேலையாக உள்ளன.



பஸ்கொடை மிருக வைத்திய பணிமனை
மற்றும் உத்தியோகபூர்வ இல்லம்



நிர்மானிக்கப்பட்டு வருகின்ற ஹாலிஎல
மிருக வைத்தியப் பணிமனை

### 2.1.5. விலங்கு பொது சுகாதாரம்

**அ). உணவு பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி நடவடிக்கையின் பொருட்டு வசதிகள் பொருட்டு கால்நடை உணவு மற்றும் கால்நடைகளின் உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்தல்.**

2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த கருத்திட்டத்தின் ஊடாக கால்நடை உணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தரத்தை சான்றுபடுத்துவதன் ஊடாக ஏற்றுமதி வசதியினையும் மற்றும் பாதுகாப்பினையும் உறுதி செய்தல். இந்த கருத்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு மிருக ஆராய்ச்சி நிறுவனத்தின் கால்நடைப் போசனை அலகில் நிலவும் ஆய்வு கூட வசதிகள் மேம்படுத்தப்பட்டள்ளன. அத்தடன் கால்நடை உணவு மற்றும் கால்நடை உற்பத்தி மாதிரிகள் 6,211 இனது தரம் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

## 2.2. 2020 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ள வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டம்.

2019 ஆம் ஆண்டு செயற்படுத்தப்பட்ட பிரதான வேலைத் திட்டங்கள் 2020 ஆம் ஆண்டு செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2.1. கால்நடை வள அபிவிருத்தி

**அ). உயர் உற்பத்தி தரவல்ல இளம் பசுக்களை விருத்தி செய்யும் வேலைத்திட்டம்**

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் கன்னி பசுக்கள் 17,000 பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

### 2.2.2. கால்நடை சுகாதரத்தை மேம்பாடு செய்தல்.

**அ). கால்நடைகளின் தொற்று நோயினை கட்டுப்படுத்தல்**

நோய்யெதிர்பு வேலைத் திட்டத்தின் பொருட்டு கால்வாய் நோய், தொண்டை அடைப்பான், கருங்காலி நோய் என்பவற்றிற்கு எதிரான தடுப்பூசிகள் பூருசெல்லோசிஸ் தடுப்பூசிகள் கா.உ.சு.திணைக்களத்தின் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நோய் எதிர்ப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் நோய் எதிர்ப்பு செய்ய எதிர்கப்பார்க்கப்படும் அளவு பின்வருமாறு.

| *தடுப்பூசி வகை* | *நோய் எதிர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கால்நடைகளின் எண்ணிக்கை* |
|---|---|
| கால்வாய் நோய் | *720,000* |
| தொண்டை அடைப்பான் | *220,000* |
| கருங்காலி நோய் | *100,000* |

**ஆ). உயர் தரத்தினாலான விலங்கு தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.**

தடுப்பூசி உற்பத்தி செயற்பாட்டை நவீனமயப்படுத்தும் பொருட்டு தடுப்பூசி உற்பத்தி ஆய்வுகூட தொகுதியை நவீனமயப்படுத்துதல்

**இ). வனஜீவி நோய் கண்காணிப்பு வேலைத்திட்டம்**

வனஜீவி நோய் கண்காணிப்பு வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் விஸ்தரிப்பது தொடர்பில் அலகு ஒன்றினை ஸ்தாபித்தல், ஆய்வுகூடத்தை நவீனமயப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் உற்பட வனஜீவ நோய் கண்காணிப்பு தொடர்பாக உத்தியோகத்தர்கள் மற்றும் அத்துறையில் உள்ளோர் பொருட்டு இயலுமை அபிவிருத்தி இதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.2.3. சட்டரீதியான நடவடிக்கைகள் மற்றும் சேவைகள்

**அ). கால்நடைகளை இனங்காணல் மற்றும் மத்திய கால்நடை பண்ணைகளின் தரவுத்தளம் என்பவற்றின் ஸ்தாபித்தல்.**

கால்நடைகளை இனங்காணல் மற்றும் மத்திய தரவு தளம் ஒன்றினை ஸ்தாபித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு 201 ஆம் அண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் 2020 ஆம் அண்டில் தொடராக செயற்படுத்தவதற்கம் எதிர்பார்க்கப்படுகின்றன. இக்கருத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள

பண்ணைகளுக்கு வெளிக்கள உத்தியோகத்தர்கள் விஜயம் செய்து மேற்பார்வை செய்வார்கள். அத்துடன் இங்கு கால்நடைகள் காதடையாளம் இடப்படும். இதன் மூலம் மாடுகளது நம்பத்தகுந்த எண்ணிக்கையை கணிப்பிட முடியும். சட்டவிரோதமான கொண்டுசெல்லுதல், அறுப்புகள் என்பன தடுக்கப்படும். அத்துடன் எதிர்கால பால் உற்பத்தியை எதிர்வு கூறுதல் திறனற்ற விலங்குகளை நீக்குதல் போன்றன இலகுவில் மேற்கொள்ள முடியும்.

**ஆ). கால்நடைகள் மற்றும் கோழிப் பண்ணைகளை பதிவு செய்தல்**

கால்நடைகள் மற்றும் கோழிப் பண்ணைகள் பதிவு செய்யும் வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டு தொடராக செயற்படுத்தப்படுகின்றன. அதற்கும் மேலாக பண்ணைகளை பதிவு செய்தல் வேலைத் திட்டத்தின் பொருட்டு பிரதேச மட்டத்தில் இனையதளத்தை அடிப்படையாகக் கொண்ட தரவுத் தளத்தை உருவாக்கல்.

### 2.2.4 விலங்கு பொது சுகாதாரம்

**அ). கால்நடைகளின் உணவின் தரத்தை சான்றுபடுத்துதல்.**

ஏற்றுமதி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் பொருட்டு உணவின் தரத்தை ஆய்வுகூட பரிசோதனையின் ஊடாக உறுதி செய்து கொள்வது இதன் நோக்கமாகும். தர மீளாய்வு அறிக்கை பெற்றுக் கொள்வதன் பொருட்டு மீளாய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான கால்நடை போசனையை பரீட்சிப்பினை மேம்படுத்தும் பொருட்டு மற்றும் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றன.

அதற்கும் மேலாக புதிய கருத்திட்டங்கள் 07 இன் பொருட்டு கருத்திட்ட மும்மொழிவுகள் 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த கருத்திட்டங்கள் எதிர்கால வரவு செலவு திட்டத்தில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றன.

| கருத்திட்டம் | கால எல்லை | மதிப்பிடப்பட்ட நிதி (ரூ.மி) | இலக்கு மற்றும் பெறுபேறு |
|---|---|---|---|
| கால்நடைவள உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பில் டிப்ளோமா பாடநெறியின் பொருட்டு தேசிய தொழிற் தகைமை (NVQ 5/6) இனை பெற்றுக் கொள்வதற்கு கற்பித்தல், பயிற்சி வசதிகள் என்பவற்றை மேம்பாடு செய்தல். | 05 வருடம் | 75.00 | 2020 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இருவருட விலங்கு பரிபாலன டிப்ளோமாவின் பொருட்டு தேசிய தொழிற் தகைமை (NVQ 5/6) மட்டத்தின் சகல வேலைத் திட்டங்களும் மேம்பாடடையச் செய்தல். |
| கால்நடை வள துறையில் முயற்சியான்மையாளர்களையும் சிற்றளவிலான வர்த்தகங்களையும் மேம்பாடு செய்யும் பொருட்டு வசதிகள் வழுங்கதல். | 05 வருடம் | 18.0 | கால்நடை வளத் துறையின் பொருட்டு ஈடுபடகின்ற புதிய முயற்சியான்மையாளர்களின் தொழில்நுட்ப அறிவு மற்றும் செயன்முறை திறனை மேம்பாடடையச் செய்தல். |
| காலநிலை வலயம் பொருட்டு இனவிருத்தி அளவுருகளை தயாரிப்பதன் ஊடாக கறவை மாட்டு வளர்ப்புத் துறையில் உற்பத்தியை மேம்பாடு செய்தல். | 05 வருடம் | 18.00 | ஒவ்வொறு காலநிலை வலயத்திற்கும் உரிய இனவிருத்தி அளவுருகள் கட்டி எழுப்புவதன் ஊடாக சிற்றளவிலான பாற் பண்ணைகளின் உற்பத்தியை அதிகரித்தல் |
| இளம் சந்ததியினரை கவர்ந்து கொள்வதன் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் 152.00 பொருளாதார திறனுடன் கூடிய மாதிரி பண்ணைகளை உருவாக்கல். | 05 வருடம் | 78.0 | இளம் சந்ததியினரை கறவை மாடு வளர்ப்புத் துறைக்கு ஈடுபடச் செய்வதன் ஊடாக உற்பத்தியை மேம்பாடடையச் செய்தல் மற்றும் பொருளாதார விருத்தியை அடைந்து கொள்ளல். |
| கால்நடைகளின் நோய் எதிர்ப்பு சக்தியின் பொருட்டு எழுகின்ற நோய் எதிர்ப்புகளை தடுத்துக் கொள்வதன் ஊடாக பொது சுகாதாரத்தை மேம்பாடடையச் செய்தல் | 05 வருடம் | 152.00 | கால்நடைகளினள் மற்றும் பொது மக்களினிடத்திலும் நோய் எதிர்ப்பு சக்தியின் பொருட்டு எழுகின்ற நோய் எதிர்பபினை குறைத்துக் கொள்ளல் |
| கால்நடை புலனாய்வு வசதிகள் மற்றும் உயிர் பாதுகாப்பு மட்டத்தில் மேம்பாடு செய்வதன் பொருட்டு மத்திய கால்நடை புலனாய்வு நிலையத்தை மேம்பாடு செய்தல். | 05 வருடம் | 200.00 | மத்திய கால்நடை புலனாய்வு நிலையத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தினை மேம்பாடடையச் செய்தல் |
| கால்நடை சுகாதாரத்தை மேம்படுத்துதல். | 05 வருடம் | 60.00 | பேரளவிலான மற்றும் வர்த்தக பண்ணைகளின் உயிரியல் பாதுகாப்பு மேம்பாடடையச் செய்வதன் ஊடாக கால்நடை சுகாதாரத்தை மேம்பாடடையச் செய்தல் மற்றும் நோய் பரவுகையை குறைத்துக் கொள்ளல். |

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் செயலாற்றுகை மற்றும் எதிர்கால இலக்குகள் தொடர்பில் இரண்டாவது அத்தியாயத்தின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானது என்பதையும் சான்றுபடுத்துகின்றேன்.

Dr. (Mrs.) R. Hettiarachchi
Director General
Dept. of Animal Production & Health
P. O. Box 13, Gatambe
Peradeniya

## 3. 2019, டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயல்திறன் கூற்று

### 3.1 நிதி செயல்திறன் கூற்று

| வரவு செலவு திட்டம் 2019 | | விடயம் | | குறிப்பு | | உண்மையான 2019 | உண்மையான 2018 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **வருமான பெறுகைகள்** | | | | 84,973,991 | - | |
| - | | வருமான வரி | | 1 | | - | - | |
| - | | பொருட்கள் சேவைகள் மீதான வரி | | 2 | | - | - | |
| - | | வெளிநாட்டு வர்த்தகம் மீதான வரி | | 3 | | - | - | ACA 1 |
| - | | வரியல்லா வருமானங்கள் மற்றும் ஏனைய | | 4 | | 84,973,991 | - | |
| - | | **மொத்த வருமான பெறுகைகள் A** | | | | **84,973,991** | - | |
| | | | | | | | | |
| | | **வருமானமல்லா பெறுகைகள்** | | | | | | |
| - | | திறைசேரி கட்டுநிதி | | | | 1,303,570,000 | 1,059,834,000 | ACA 3 |
| - | | வைப்புக்கள் | | | | 17,096,397 | 21,583,962 | ACA 4 |
| - | | முற்பனக் கணக்குகள் | | | | 31,253,172 | 32,459,492 | ACA 5/5(a) |
| - | | ஏனைய பெறுகைகள் | | | | - | 73,029,474 | |
| - | | **மொத்த வருமானமல்லா பெறுகைகள் (B)** | | | | **1,351,919,570** | **1,186,906,928** | |
| - | | **மொத்த வருமான பெறுகைகள் + மொத்த வருமானமல்லா பெறுகைகள் (C) = (A) +(B)** | | | | **1,436,893,561** | **1,186,906,928** | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | கழி : செலவினங்கள் | | | | | | |
| | | | | | | | | |
| | | மீண்டுவரும் செலவுகள் | | | | | | |
| 466,000,000 | | கூலி, சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன்கள் | 5 | | | 463,208,230 | 424,633,218 | ACA 2(ii) |
| 565,275,000 | | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | | | 96,251,756 | 90,715,376 | |
| 21,491,000 | | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | | | 21,248,032 | 10,907,937 | |
| - | | வட்டி செலுத்துதல் | 8 | | | - | - | |
| 16 | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களை பராமரித்தல் | இணக்கமற்றது | விஷேட காரனத்தினால் இடமாற்றல் பெற்றுக் கொடுக்கையில் மற்றும் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்படுகின்ற போது பதவியனியினர் அதிகரித்து சென்றுள்ளது. | எதிர்காலங்களில் உரிய இடமாற்றல் செயன்முறைக்கு அமைய உரிய முறையில் பின்பற்றுவதன் ஊடாக அதனை தவிர்ந்த கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இலக்கம் 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **17** | **பொது மக்களுக்கான தகவல் வழங்கள்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல். | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வளைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வளைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுக்களை எளிதாக்குதல் | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 ஆவது பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்துதல்.** | | | |
| 18.1 | பொது நிர்வாக முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2008 மற்றும் 05/2008 (i) இன்படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமற்றது | பொ.நி.சுற்றறிக்கை இலக்கம் 05/2008 இற்கு அமைய 2010 ஆம் ஆண்டு பிரஜை சேவை வழங்கல் கொள்கை தயார் செய்யப்பட்டுள்ளதுடன் இலக்கம் 05/2018(1) கொண்ட திருத்தம் செய்யப்பட்ட பொ.நி.சுற்றறிக்கைக்கு அமைய பிரஜை சேவைவை வழங்கள் கொள்கை திட்டம் தயாரிக்கையில் ஒவ்வொறு அலகில் இருந்தும் தகவல் வழங்கும் வரைவு தயார் செய்யப்பட்டுள்ளன. | உரிய கால அட்டவணைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதன் ஊடாக ஏற்படும் தாமதத்தை தவிர்ந்துக் கொள்வதன் பொருட்டு அடுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு உள்ளன. |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்தவரை பிரசைகள பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதனை | இணக்கமற்றது | புதிய முறைமை ஒன்று தயாரிக்கப்படவுள்ளன. | எதிர்காலத்தில் ஏற்படுகின்ற தாமதத்தை தவிர்ந்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறி முறையை அமைத்துள்ளது. | | | |
| **19** | **மனிதவள திட்டத்தினை தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 ஆம் திகதிய பொ.நி.சுற்றிக்கை இல 2/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத்திட்டம் தயாரித்தல். | இணக்கமற்றது | மனித வள திட்டமிடல் தயாரிக்கப்பட்டுக் கொண்டுள்ளன. | மனித வள திட்டமிடல் விரைவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும். |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணி நேரம் பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனிதவளத் திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமற்றது | அவ்வாறே | அவ்வாறே |
| 19.3 | மேற்கண்ட சுற்றிக்கையின் இணைப்பு 1 இல் கொடுக்கப்பட்ட படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | அவ்வாறே | அவ்வாறே |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 ஆவது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்திட்டம் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்ததல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல் | இணக்கமானது | அவ்வாறே | அவ்வாறே |
| **20** | **கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்** | | | |
| 20.1 | முந்திய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பந்திகளினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்தல் | இணக்கமானது | | |

## 8. *பின்னிணைப்பு I - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை*

கணக்கீட்டு உத்தியோகத்தர்
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவிற்கு அமைய கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை

---

1. நிதிக்கூற்று

1.1. நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி அன்று உள்ளவாறான நிதி நிலமைக் கூற்றுக்கள், அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை அறிக்கை மற்றும் நிதி பிரளயக் கூற்றுக்களின் உள்ளடக்கிய 2019 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுடன் இணைத்து சொல்லப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) பிரமானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய எனது அதிகாரத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவிற்கு அமைய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த நிதிக்கூற்று தொடர்பான எனது கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 154 (6) அமைப்புடன் இணைத்து சொல்லப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆவது பிரிவிற்கு அமைய சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கையை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் தாக்கங்கள் தவிர்த்து, 2019 டிசம்பர் 03 ஆம் திகதிய இலக்கம் 271/2019 இனைக் கொண்ட அரசாங்க கணக்கீட்டு சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு அமைய தயார் செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களின் 2019 டிசம்பர் 31 ஆம் திகதி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதி நிலமைகள் மற்றும் அன்றைய திகதி முடிவடையும் ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் நிதி பிரளாய்வுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளுக்கு இயைய உண்மையானதும் சாதாரனமானதுமான நிலைமைகள் பின்பற்றப்படுகின்றது என நான் நன்கு அறியேன்.

1.2. நிலபரகூற்றை கணக்கிடுவதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இயைய கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது பொறுப்புக்கள், கணக்காய்வாளரது பொறுப்புக்கள் எனும் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை வழங்குவதற்காக என்னிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதியதாகவும் பொருத்தமானதாகவும் உள்ளது என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்காய்வு உத்தியோகத்தரது மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்புக்கள்

---

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமையவும் உண்மையானதும் நியாயமானதுமான நிலமையை எடுத்துக் காட்டுவதன் பொருட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் வஞ்சனை மற்றும் தவருகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதியதான போலி கூற்றுக்களாகவன்றி நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்கு இயலுமாகின்ற வகையில் தேவையாகின்ற உள்ளக கட்டுப்பாட்டை தீர்மானிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவிற்கு அமைய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் தற்போதைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க இயலுமாகின்ற வகையில் சொந்த வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி முறையாக நாளேடுகள் மற்றும் அறிக்கைகள் நடாத்திச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவிற்கு அமைய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டின் பொருட்டு வெற்றிகரமான உள்ளக கட்டுப்பாட்டு வளையமைப்பை தயாரித்து நடாத்திச் செல்வதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டியதுடன் அந்த வளையமைப்பின் வெற்றி தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கு அமைய வளையமைப்பை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு தேவையான வேறுபாடுகள் மேற்கொள்ளப்படும்.

1.4. நிதிக்கூற்று கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

---

சுருக்கமாக நிதிக்கூற்றுக்கள், வஞ்சனை மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற போதிய தவறான கூற்றுக்களாகவன்றி சாதாரணமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உட்படுத்தி கணக்காய்வு அறிக்கை வெளியிடுதல் எனது நோக்காகும். சாதாரண முறையில் சான்றபடுத்துதல் உயர் மட்டத்திலான சான்றுபடுத்துகையாக இருந்தாலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு மேற்கொள்கையில் அது எவ்வேலையிலும் தகவல்கள் கூற்றுக்களாகவன்றி இல்லை என்பதை உறுதி செய்யப்படுவதில்லை.

வாஞ்சனை மற்றும் தவறு தனியாக அல்லது கூட்டாக பாதிப்பதால் தகவல்கள் கூற்றுக்கள் அல்லாது ஏற்பட இயலும் என்பதால், இந்த கூற்றினை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்களால் பொருளாதார தீர்மானம் எடுக்கையில் அது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில் தீர்ப்பு மற்றும் தொழில் சந்தேகத்திற்கு இடமளிப்பதால் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு செய்யப்பட்டது. என்னால்

- வஞ்சனை அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதிய போலி கூற்றுக்களின் ஆபத்துக்களை இனங்காண்கையில் மற்றும் மதிப்பீடு செய்கின்ற போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு பிரமானங்கள் திட்டுமிடுகையில் வஞ்சனை மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற ஆபத்துக்களை புறக்கணித்துக் கொள்வதற்காக போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்வது எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். போதிய போலியான கூற்றுக்களின் ஏற்படுகின்ற தாக்கத்திற்கும் மேலாக வஞ்சனைகளில் ஏற்படுகின்ற தாக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைவதுடன், நாட்பட்ட போலி

ஆவணங்கள் தயாரித்தல், வஞ்சனை சிந்தனைகளை கைவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை கைவிடுதல் வஞ்சனை ஏற்படுவதற்கு காரணமக அமையும்.

- சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு செயன்முறையை திட்டமிடுதல் பொருட்டு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் உள்ளக நிர்வாகம் வெற்றிகரமாக இருப்பது தொடர்பில் அபிப்பிராயம் வெளியிடுவற்கு கருத்து முன் வைக்கப்பட வில்லை.

- வெளிப்படுத்துகை உள்வாங்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளீர்ப்பின் பொருட்டு அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கள்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் சாதாரண முறையில் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ளதை மதிப்பிடல்.

- மொத்தமாக நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கையில், நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் பொருட்டு அடிப்படையாகக் கொண்ட கொடுக்கல் வாங்கள்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் மற்றும் சாதாரணமாகவும் உட்படுத்தப்பட்டுள்ளன எனவும், எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டறிதழ், பிரதான உள்ளக நிர்வாக பலயீனம் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பிலும் கணக்கீட்டு உத்தியோகத்தர் அறிவுருத்தப்பட்டுள்ளார்.

## 1.5. வேறு நாளாந்த தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்கம் கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவிற்கு அமைய பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

அ). கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் இறுதி மீதி மீளாய்வு ஆண்டில் நிதிக்கூற்றுக்களின் ஆரம்ப மீதியாக உட்படுத்துகின்ற போது பிரதான பேரேட்டின் செலவுகள் மற்றும் 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கட்டுநிதி கணக்கு மீதிகளுக்கு இடையே ரூபா 1,061,625,704 இற்கான வேறுபாடு நிலவியதுடன் அந்த வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்க வில்லை.

ஆ). கடந்த ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை

| பந்தி இல | கணக்காய்வு அவதானிப்பக்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 02(அ)(ii) | முற்பணக் கணக்கு இணைக்கப்பாட்டு கணக்கினை தயாரிக்க வேண்டி இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்டு உள்ள நிதிக் கூற்றுக்களுக்கு அமைய ரூபா 998,657,372 எனும் மீதிக்கு முற்பண இணக்கக்கணக்கு தயார் செய்யப்பட்டு இருக்கவில்லை. | மீளாய்வு ஆண்டிற்கான சமர்ப்பிக்கப்பட்டு இருந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்த ரூபா 6,917,625 இற்கான முற்பணக் கணக்கு இணக்க மீதியின் பொருட்டு முற்பண இணக்கக் கணக்கு சமர்ப்பிக்கப்படாது இருந்தமையால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| 1.4.9 (iv) | நிதிப் பிரமானம் 214 இற்கு அமைய பொறுப்புக்களை ஒழுங்காக பரீட்சிக்கப்படக் கூடியவாறு பொறுப்புப் பட்டியலில் பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டு கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கையில் 1.6.6.(இ) பந்திக்கு பெற்றுத்தரப்பட்டுள்ள விடைக்கு அமைய கணக்காய்வில் சுட்டிக்காட்டியதன் பின்பு பொறுப்புக்கள் பட்டியல் ஒன்று நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டு |

இருந்த போதிலும் அவ்வாறு பொறுப்புப் பட்டியல் ஒன்றினை நடாத்திச் செல்லவில்லை.

1.6. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கருத்துக்கள் முன்வைத்தல்

1.6.1. நிதிச் செயலாற்றுகை அறிக்கை

1.6.1.1 வருமானம் அல்லா பெறுகைகள்

1.6.1.2. மீண்டு வரும் செலவுகள்

திணைக்களத்தினால் பேணப்படுகின்ற செலவு பேரேட்டில் செலவு விடயங்கள் 03 இன் பொருட்டு ஒதுக்கீடு மீதப்படுத்துதல் மற்றும் மீளாய்வு ஆண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றில் ஏடிஏ- 2(ii) இல் செலவு கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூபா 1,309,072 இற்கான வேறுபாடு காணப்பட்டது.

1.6.1.3 மூலதன செலவு

கீழே குறிப்பிடப்பட்ட அவதாணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

அ). திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற செலவு பெரேட்டுக்கு அமைய செலவு விடயங்கள் 05 இற்கான ஒதுக்கீடுகள் மீதமாகுதல் மற்றும் மீளாய்வு ஆண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் ஏடிஏ- 2(ii) இல் செலவு கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளுக்கு இடையே ரூபா 1,535,637 இற்கான வேறுபாடு காணப்பட்டது.

ஆ). வேலைத் திட்டம் இலக்கம் 02 இல் ரூபா 759,000,000 நிதி ஒதுக்கீட்டில் ரூபா 698,345,218 செலவு செய்யப்பட்டு இரந்த போதிலும் நிதிக்கூற்று அறிக்கையில் வேலைத்திட்டங்களுக்கு அமைய செலவு கூற்றில் ஏசிஏ 2(i) இல் ஒவ்வொறு செலவு விடயத்தின் கீழும் விபரம் சுட்டிக்காட்டப்படாது மொத்த செலவு மற்றம் மெத்த மீதி மாத்திரம் சுட்டிக்காட்டப்பட்டு இருந்தது.

1.6.1.4. முற்பணம் கிடைக்கப் பெறுதல்

ஒருங்கிணைந்த மீதிகளை சரிபார்க்கையில் முற்பணம் கிடைக்கப் பெற்ற பெறுமதி ரூபா 30,271,855 ஆக உள்ளதுடன் திறைசேரி அட்டவணை எஸ்ஏ-52 இற்கு அமைய மொத்த பெறுமதி ரூபா 31,253,172 ஆக காணப்படுவதடன் ரூபா 981,317 இற்கான வித்தியாசத்திற்கான காணரணத்தை அடையாளங் கண்டு இருக்க வில்லை.

1.6.1.5 முற்பண இணக்கக் கணக்கு

2019 டிசம்பர் 03 ஆம் திகதி இலக்கம் 271/2019 இனைக் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் 7(vi) ஆம் பந்திக்கு அமைய நிதிச் செயலாற்றகை அறிக்கைக்கு அமைய வருட இறுதியின் போது திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய அல்லது திறைசேரியினால் கிடைக்கப்பட வேண்டிய பெறுமதி

மற்றும் காசுப் புத்தகத்திற்கு அமைய திறைசேரிக்கு தீர்க்கப்பட வேண்டிய பெறுமதி கட்டாயமாக வேறு பெறமதியை எடுப்பதால் அந்த மீதியின் இணக்கப்பாட்டின் பொருட்டு முற்பணக்கணக்கு இணக்கக் கூற்றினை தயார் செய்ய வேண்டி இருப்பினும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றிற்கு அமைய ரூபா 6,917,629 எனும் மீதிக்கு முற்பணக் கணக்கிணக்கக் கூற்றினை சரியாக தயாரித்து இருக்கவில்லை.

1.6.2. நிதி நிலமை தொடர்பான கூற்று

1.6.2.1 நிதி அல்லாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதியல்லா சொத்துக்கள் தொடர்பிலான கூற்றுக்களின் இறுதி மீதி ரூபா 2,173,615,162 ஆகவும் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்த நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் ஆரம்ப மீதி ரூபா 2,374,193,910 ஆகவும் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 200,578,748 வேறுபாடு காணப்பட்டது.

ஆ). நிதிக்கூற்றுக்களில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவுகளின் மொத்தம் ரூபா 6,231,160 ஆக காணப்பட்ட பொதிலும் செலவு விடயத்தில் 2101,2101,2103 மற்றம் 2104 இற்கு அமைய கொள்வனவுகளின் பெறுமதி ரூபா 11,332,548 ஆகவும் அவற்றிற்கு இடையே ரூபா 5,101,388 இற்கான வேறுபாடு காணப்பட்டது.

1.6.2.2 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் நடாத்திச் செல்லாமை

நி.பி.214 இற்கு அமைய செலவுகளை ஒழுங்காக பரீட்சித்து பார்க்க இயலுமாகின்ற வகையில் செலவு பட்டியலில் செலவுகள் குறிப்பிடப்பட வேண்டியதுடன் ரூபா 15,120,242 பெறுமதியான செலவுகள் தொடர்பில் ஆவணம் நடாத்திச் செல்லப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமை

பின்வரும் விடயங்கள் அவதாணிக்கப்பட்டன.

அ). நிதி ஒழுங்கவிதிகள் 4 இற்கு அமைய வரவ செலவுத்திட்ட ஆவணம் தயாரிப்பதற்கு முன்னர் மீண்டுவரும் செலவுகள தொடர்பில் ஆய்வினை ஆரம்பித்து மேற்கொள்ளப்பட்ட செலவுகள் முன் அனுமானிக்கப்பட வேண்டியதுடன் செலவுகள் முறையாக விரிவாக்குதல் தெரிவு செய்யப்பட்டடு செலவு இலக்கினை முடிவுறுத்துதல் மற்றும் நோக்கங்கள் தெளிவாக விபரிக்கப்பட வேண்டும். அவ்வாறே மூலதன கருத்திட்டங்கள் உரியவாறு அனுமதிக்கப்பட்டதுடன் விரிவான மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாததற்கு அமைய ரூபா 1,298,000 வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுக்கு மேலாக ரூபா 176,766,000 முழுமையான ஒதுக்கீடு மற்றும் ரூபா 84,933,991 இனை திணைக்கள வருமானத்தை பயன்படுத்தி வருடத்தினுள் செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்தது.

ஆ). ஆளுக்குரிய வேதனாளிகள், வேறு மீண்டுவரும் செலவுகள் மூலதனச் செலவுகள் மற்றும் விஷேட கருத்திட்டங்களுக்கான செலவு மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் செலத்துதல்

பொருட்டு வருடாந்த முற்பன தேவைப்பாட்டை விஞ்சி ரூபா 1,416,656,960 முற்பனம் கேட்டுக் கொள்ளப்பட்டு இருந்தது.

இ). முற்பன விண்ணப்பத்தில் முற்பன எல்லையாக ரூபா 1,288,440,000 என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் சரியான பெறுமதி ரூபா 1,310,040,000 என்பதால் ரூபா 21,600,000 இற்கான வேறுபாடு காணப்பட்டது.

2.2. வருமான முகாமை

------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). திணைக்களத்தினால் வருமான தலைப்பு 04 இற்கு உரியவாறு திரட்டப்பட்டு இருந்த ரூபா 32,129,157 வருமானம் தொடர்பில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை.

ஆ). நிதிக்கூற்றுக்கு அமைய திணைக்களத்தினால் வருமான குறியீடு 08 இற்கு உரியவாரு ரூபா 84,973,991 இற்கான வருமானம் திரட்டப்பட்டு இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டுக்காக செயற்பாட்டு திட்டமிடல் தயார் செய்து இருக்கவில்லை.

2.3. செலவு முகாமை

------------------------------

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). செலவு விடயங்கள் 07 இற்கு உரியவாறு ரூபா 109,500,000 தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 65,612,613 பயன்படுத்தப்படாது மீதப்படுத்தி வைத்திருந்ததுடன் அந்த மீதி தேறிய ஒதுக்கிட்டின் நூற்றிற்கு 16 முதல் நூற்றிற்கு 90 வரையிலான வீச்சில் காணப்பட்டது.

ஆ) வருடத்தின் மொத்த செலவிற்கு ஒப்பீட்டளவில் மீண்டுவரும் செலவு மற்றும் மூலதன செலவின் பொருட்டு முறையே நூற்றிற்கு 44 மற்றும் நூற்றிற்கு 56 என்ற வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருந்த போதிலும் உண்மைச் செலவினை கவனத்திற் கொள்கையில் மொத்த செலவிற்கு ஒப்பீட்டளவில் மீண்டுவரும் செலவிற்காக நூற்றிற்கு 99 செலவிடப்பட்டு இருந்ததுடன் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டு இருந்த மூலதனச் செலவு நூற்றுக்கு 90 எனும் மட்டத்தில் இடம் பெற்றது.

இ). திறைச்சேரி செயலாளரது 2019 செப்டம்பர் 24 ஆம் திகதி தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை இலக்கம் 5/2019 மற்றும் 2019 ஏப்ரல் 08 ஆம் திகதி இலக்கம் 03/2019 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய மூலதனச் செலவுகளில் நூற்றிற்கு 25 மீதப்படுத்தி வைக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ரூபா 888,000,000 இற்கான தேறிய ஒதுக்கீட்டின் ரூபா 94,541,929 அதாவது நூற்றிற்கு 11 அளவில் மீதப்படுத்தி வைக்கப்பட்டு இருந்தது.

2.4. பொறுப்புக்கள் மற்றும் பிணைகளுக்கு வருதல்

--------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ). 2017 நவம்பர் 30 ஆம் திகதி இலக்கம் 05/2017 கொண்ட திறைசேரி கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.viii பந்திக்கு அமைய மற்றும் 2003 செப்டம்பர் 06 ஆம் திகதிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 162 இல் குறிப்பிடப்பட்டு

உள்ளதற்கு அமைய 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய பற்றுச்சீட்டான ரூபா 194,534,780 கணக்கிற்கு உட்படுத்தப்பட்டு இருந்த போதிலும் செலவாக ரூபா 15,120,243 எனக் குறிப்பிடப்பட்டு இருந்ததால் ரூபா 179,414,537 இற்கான வேறுபாடு காணப்பட்டது.

ஆ). நிதிக்கூற்றின் குறிப்பு (iii) இல் பொறுப்புக்கள் மற்றும் பிணைகள் தொடர்பில் கூற்றில் உட்படுத்தப்பட்டு இருந்த மீதி ரூபா 15,120,243 ஆக காணப்பட்ட போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்த பொறுப்பக்கள் தொடர்பில் சிகாஸ் வேலைத்திட்டத்தில் அச்சிடப்பட்ட பிரதியின் மொத்தம் ரூபா 7,490,782 ஆக காணப்படுவதன் காரணமாக ரூபா 7,629,461 இற்கான வேறுபாடு நிலவுகின்றது.

இ) நிதி ஒழுங்குவிதி 94(2) இன் ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக திணைக்களத்தினால் செலவு விடயங்கள் 04 இற்கு உரியதாக ரூபா 1,485,258 ஒதுக்கீட்டை விஞ்சி பொறுப்புக்களுக்கு பிணையாக இருந்தது.

ஈ). பொறியியல் அலகிற்கு கிடைக்கப் பெற்று இருந்த ஆயினும் சான்றுபடுத்தப்படாத மொத்தம் ரூபா 3,669,130 இற்கான பற்றுச்சீட்டுக்களின் பெறுமதிக்கு பிணையாக குறிப்பிடப்பட்டு இருக்க வில்லை.

2.5. கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்துகை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய கணக்கீட்டு உத்தியோகத்தர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சான்றுபடுத்த வேண்டி இருந்த போதிலும் அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை.

அ) திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டின் பொருட்டு திறனான உள்ளக நிர்வாக வளையமைப்பினை தயாரித்து நடாத்திச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்தப்பட வேண்டி இருப்பதுடன் அந்த வளையமைப்பின் திறன் தொடர்பில் அவ்வப் போது மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதற்கு அமைய வளையமைப்பினை திறனாக மேற்கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த மீளாய்வுகளை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்றினை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அத்தகைய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதாக கூற்றினை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

ஆ) வருடாந்த மற்றும் வேறு நிதிக்கூற்றுக்களின் தேவையான நேரத்தில் ஒழுங்கமைக்கப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்தப்பட வேண்டி இரப்பதுடன், அதற்கும் மேலாக கணக்காய்வ செய்யப்படுகின்ற முழுமையான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டியதுடன், 2019 ஆம் ஆண்டின் பொருட்டு இறுதியான நிதிக்கூற்றுக்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழி பிரதிகள் 2020 மே மாதம் 21 ஆம் திகதி அதாவது 2½ மாதம் தாமதமாகியதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் சிங்கள மொழிமூலமான பிரதி மாத்திரம் உரிய திகதிக்கு கையளித்து மீதமான பிரதிகள் 2020 மார்ச் 13 ஆம் திகதி அதாவது 13 நாள் தாமதத்துடன் கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது.

இ) கணக்காய்வாளருக்கு தேவையாகின்றவாறு உரிய காலத்தினுள் சகல கணக்காய்வுகளுக்கும் விடை அளிப்பதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால்

சான்றுபடுத்தப்பட வேண்டி இருப்பினும் கணக்காய்வு விசாரணைகள் 07 வினியோகிக்கப்பட்டு 03 மாத காலம் கழிந்தும் விடை அளிக்கப்படடு இருக்கவில்லை.

2.6. சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளுக்கு இயைய அமையாமை

எழுமாறாக தெரிவு செய்து பரீட்சிக்கையில் அவதாணிக்கப்பட்ட சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைய இல்லாது இருந்த சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ன.

| | சட்டம், சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் அமைய | இணங்காமை |
|---|---|---|
| அ). | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| i | VIII ஆம் அத்தியாயத்தின் iv ஆம் பிரிவு | தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு புறம்பாக வருட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டு இருந்த ரூபா 8,000,000 இற்கு வருடாந்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு நிதிப் பிரமானம் 66 இன் கீழ் வேறு செலவு தலைப்புகளில் ரூபா 2,000,000 ஒதுக்கிடு மாற்றம் செய்து ரூபா 9,999,987 இற்கு மேலதிக நேர மற்றும் லீவு நாள் வேதனம் செலுத்தப்பட்டு இருந்தது. |
| ஆ). | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் | |
| i | நிதி ஒழுங்குவிதி II | போக்குவரத்து செலவுகள் பொருட்டு செலவு விடயங்கள் ரூபா 7,500,000 இற்கான ஒதுக்கீடு போதியதாக இல்லை என அறியத்தந்து நி.பி. 66 இன் ஊடாக ரூபா 2,000,000 இற்கான ஒதுக்கீடு பெற்றுக் கொண்டு ரூபா 9,497,927 இற்கான போக்குவரத்துச் செலவு மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும் அது தொடர்பில் தெளிவான காரணம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. |
| ii | நிதி ஒழுங்குவிதி 101 | உத்தியோகத்தர்களின் கவணயீனம் காரணமாக ஏற்பட்டுள்ள இழப்புக்கள் மறறும் நட்டங்கள் தொடர்பிலான ஆவணங்களை தேடிக் கொள்வதற்கு முடியாததன் காரணமாக நிர்வாக அலகினால் 17 வருடங்கள் பழமையான ரூபா 42,200 இற்கான இழப்புக்கள் நட்டம் நிகழ்வுகள் 05 புத்தகத்தில் இருந்து நீக்குவதற்கு சிபாரிசு செய்யப்பட்டு இருந்தது, |
| iii | நிதி ஒழுங்கு விதிகள் 104(3) மற்றும் 104 (4) | அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் மேலும் பதிவழிக்க வேண்டிய நிகழ்வுகள் ஏற்பட்டு 03 மாதம் |

| | | |
|---|---|---|
| | | முதல் 08 வருடங்களுக்கும் மேலாக காலம் எடுக்கப்பட்டு இருந்த போதிலும் 2008 ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தின் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 2008/01 இல் குறிப்பிடப்பட்டதற்கு அமைய மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய கூட்டுத் தொகை ரூபா 2,807,612 இற்கான நிகழ்வுகள் 16 தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டு இருக்கவில்லை |
| iv | | 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு உரிய ரூபா 1,484,684 நிகழ்வுகள் 21 தொடர்பில் நிதிப்பிரமானம் 104 (4) இற்கு அமைய முழுமையான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உரிய குழு நியமனம் செய்யப்பட்டு இருந்த போதிலும் மூன்று மாதத்தினுள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வில்லை. |
| v | நிதி ஒழுங்குவிதி 272(3) | மீளாய்வு ஆண்டில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு உரிய ரூபா 222,679,837 இற்குரிய பெறுமதி உள்ள வவுச்சர்கள் 2683 இன் 2020 மே மாதம் 22 ஆம் திகதி ஆகின்ற வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. |
| vi | நிதி ஒழுங்குவிதி 396(ஈ) | வினியோகிக்கப்பட்டு 06 மாதம் அடைந்தும் செலுத்தவதற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்த ரூபா 62,520 இற்கான காசோலைகள் 08 தொடர்பில் நிதி பிரமானத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை. |
| vii | நிதி ஒழுங்குவிதி 427(அ) | அரச ஊழியர்களது முற்பனக் கணக்கு தொடர்பில் 2015 ஆம் ஆண்டு முதல் திறைசேரி மற்றும் திணைக்கள கணக்குகளுக்கு இடையே நிலவுகின்ற ரூபா 100,125 இற்கான வேறுபாடு இனங்காணப்பட்டு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை. |
| viii | நிதி ஒழுங்குவிதி 570(இ) மற்றும் 571 (3) | 02 வருடத்தை அடைந்த ரூபா 2,302,808 காலம் கடந்த வைப்புக்கள் 97 அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை |
| இ) | 2019 டிசம்பர் 03 ஆம் திகதி இலக்கம் 271/2019 இனைக் கொண்ட பணிப்பாளர் நாயகத்தின் அரச கணக்கீட்டு சுற்றறிக்கை<br>------------------------------------------------------------ | |
| | i). பந்தி இலக்கம் 3.1 இற்கு அமைய | மீளாய்வு ஆண்டின் பொருட்டு திணைக்களத்திற்கு உரிய திறைசேரி அச்சுப் பிரதிகள் நிதிக் கூற்றுக்களின் இணைப்பாக உட்படுத்தப்பட்டு இருக்க |

| | |
|---|---|
| | வில்லை. |
| ii). பந்தி இலக்கம் 06 | மேலும் அறவிட்டுக் கொள்வதற்கோ அல்லது நீக்கி விடுவதற்கோ உள்ள கண்காணிப்பு வேலைத் திட்டங்களில் நிகழ்வுகள் 07 மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் நிகழ்வுகள் 23 நிதி ஒழுங்குவிதி 109 இன் கீழ் புத்தகத்தில் இருந்து பதிவழித்தல் மற்றும் அறவிட்டுக் கொள்வது தொடர்பில் கூற்றில் குறிப்பிடப்பட்டு இருந்தன. |
| iii). | அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் நிகழ்வுகள் 32 இற்கு உரிய ரூபா 1,936,263 இற்கான நட்டங்கள் மற்றும் நீக்கி விடுதல் தொடர்பில் தகவல்கள் புத்தகங்களில் பதிவழித்தல் தொடர்பான மாதிரிப்படிவத்திற்கு அமைய சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. |

ஈ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| திறைச்சேரி செயலாளரது 2019 ஜூன் 17 ஆம் திகதிய இலக்கம் 04/2019 கொண்ட வரவு செலவு திட்ட சுற்றிக்கையின் 02(iv) | எழுது கருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் செலவு விடயத்தின் கீழ் வரும் செலவுகள் இயன்ற அளவு குறைத்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும் அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது வருடாந்த ஒதுக்கீடுகளுக்கும் மேலாக மற்றும் மீளாய்வு ஆண்டினுள் பரிபூரண மதிப்பீட்டின் ஊடாக ரூபா 1,000,000 மற்றும் நிதி ஒழுங்கஜவிதி 66 இற்கு மாற்றம் செய்வது ஊடாக ரூபா 500,000 மாற்றம் செய்யப்பட்டு கூட்டுத்தொகை ரூபா 5,000,000 இற்கான தேறிய ஒதுக்கீட்டின் ரூபா 4,617,087 இற்கான செலவு செய்யப்பட்டு இருந்தது. |

உ) திணைக்கள சுற்றறிக்கை

| | |
|---|---|
| 2008 ஆகஸ்ட் 27 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தின் திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 2008/01 | கால்நடைகளின் இறப்பு தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், அந்த காரணங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாமைக்கு அமைய 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை கால்நடைகளின் இறப்பு தொடர்பில் ரூபா 8,536,078 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் புத்தகங்களில் பதிவழிக்கப்பட்டு இருக்க வில்லை. |

2.7 முற்பனங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

வெளியாகியுள்ள கணக்காய்வு அவதாணிப்புக்கள் பின்வருமாறு

அ). முற்பணம் உரிய செயற்பாடுகளின் பொருட்டு பயன்படுத்தப்பட வேண்டி இருப்பினும் 05 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 122,250 இற்கான முழுமையான முற்பனம் அவ்வாறு பயன்படுத்தப்படாது 08 நாட்களுக்கும் 21 நாட்களுக்கும் இடையேயான காலத்தினுள் செயற்படுத்தப்படாது வைக்கப்பட்டு மீள தீர்க்கப்பட்டு இருந்தன.

ஆ). உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முற்பனத் தொகையை பெற்றுக் கொள்ளமை காரணமாக 29 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்த ரூபா 916,038 இற்கான முற்பணத் தொகையில் ரூபா 250,211 செலவு செய்யப்படாமல் பணத்தினால் தீர்க்கப்பட்டு இருந்தன.

இ) 2015 ஜுலை 14 ஆம் திகதிய இலக்கம் 03/2015 இனைக் கொண்ட திறைசேரி செயலாளரது அரச நிதி சுற்றறிக்கையின் நிதி ஒழுங்குவிதி 371(2)(ஆ) இற்கு அமைய 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 5,845,296 இற்கான முற்பணம் பெற்றுக் கொடுக்கப்பட்டு இருந்தன.

உ). நிதி ஒழுங்குவிதி 371(இ) இற்கு அமைய வழங்கப்படுகின்ற இடை கட்டு நிதி ஒன்று வழங்கப்படுகின்ற நடவடிக்கை முற்றுப் பெற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டி இருந்த போதிலும் 11 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணங்கள் 05 நாள் முதல் 27 நாட்களுக்கு இடையே கையில் வைத்திருந்து தீர்க்கப்பட்டு இருந்தது.

ஊ). 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 256/2017 கொண்ட அரசாங்க கணக்கீட்டு சுற்றறிக்கைக்கு அமைய சேவையை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்து ஒரு வருடம் முதல் 05 வருடம் வலைரயிலான காலப்பகுதியில் அறவிடப்பட வேண்டி இருந்த ரூபா 135,369 கடன் மிதி அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்க வில்லை.

எ). 2017 டிசம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 262/2017 கொண்ட அரசாங்க கணக்கீட்டு சற்றிக்கை 04 ஆம் பந்திக்க அமைய 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஓய்வு பெற்ற அல்லது இறப்பு கொடை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வெண்டி இருந்த எந்த ஒரு கடன் மீதியும் முற்பன பி கணக்கில் இடம் பெறாத போதிலும் உத்தியோகத்தர்கள் நான்கு பேரிடம் இருந்து ரூபா 599,316 இற்கான கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

ஏ). தேசிய வரவு செலவு திணைக்களத்தின் 2019 ஜுன் 27 ஆம் திகதி இலக்கம் 05/2019 கொண்ட அரசாங்க நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய இடமாற்றல் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் இருவரிடம் இருந்து ரூபா 433,377 கடன் மீதி 03 மாதத்தினுள் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

2.8 வைப்புக்கள்

-------------------

வெளியாகியுள்ள கணக்காய்வு அவதாணிப்புக்கள் பின்வருமாறு

அ). 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்தங்களுக்காக என வைத்திருந்த ரூபா 185,593 பெறுமதியான மிதக்கவிடப்பட்ட நிதி மீதி 11 இன் வருமானத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டு இருந்ததுடன் ஒப்பந்தங்களின் குறைபாடுகள் சரி செய்வதற்கு அல்லது மீளாய்வ செய்து கொடுப்பதற்கு அல்லது நடவடிக்கை மேற்கொள்ளப்படாது 02 வருடங்கள் அடைந்ததன் பின்னர் வருமானத்திற்கு எடுத்தச் செல்லப்பட்டு இருந்தது.

ஆ). திறைச்சேரி செயலாளரது 2015 ஜுன் 24 ஆம் திகதி அரசாங்க கணக்கீட்டு சுற்றறிக்கை இலக்கம் 243/2015 இன் 02 ஆம் பந்திக்கு அமைய மற்றும் அரசியல் யாப்பின் 149(1) ஆம் பிரிவிற்கு அமைய உரிய செயற்பாடுகளின் பொருட்டு சட்டத்தினால் ஒதுக்கீடு செய்யப்படாத சகல பெறுகைகளும் அரசின் ஒருங்கினைந்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டி இருந்த போதிலும் AFFACI கருத்திட்டத்திற்கு உரிய 2016 ஆம் ஆண்டு முதல் 2019 டிசம்பர் 31 வரை ரூபா 3,698,111 நிதி தொகை ஒருங்கினைந்த நிதிக்கு வரவு வைக்காது பொது வைப்புக் கணக்கில் மிதக்கவிடப்பட்டு அந்த கணக்கில் இருந்து ரூபா 1,812,666 செலுத்தப்பட்டு இருந்ததடன் 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி ரூபா 1,885,445 ஆகும்.

இ) 2019 மார்ச் 15 ஆம் திகதி இலக்கம் சிஎல்பிஎல்/கேடி/எச்/டிஏபிஎச்/2018/74 கொண்ட கணக்காய்வின் ஊடாக சுட்டிக்காட்டப்பட்டு இருந்த நிர்மான நடவடிக்கைகளுக்கு உரிய ரூபா 123,152 பெறுமதியான நிதி டென்டர் வைப்புக் கணக்கில் குறிப்பிடப்படாது பொருத்தமற்ற முறையில் தற்காலிகமாக மிதக்கவிடப்பட்ட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு இருந்தது.

ஈ) வடமத்திய மாகாண பணிப்பாளரினால் பால் உற்பத்திப் பண்ணைகள் இனங்காணப்படும் கருத்திட்டத்தின் கீழ் மாடுகளின் இரத்தத்தை பரீட்சிக்கும் உபகரணம் கொள்வனவு செய்வதன் பொருட்டு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 06 ஆம் திகதி ரூபா 618,100 இற்கான காசோலை அனுப்பி வைக்கப்பட்டு இருந்ததுடன் வருட இறுதியாகும் வரை இந்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாது வைக்கப்புக் கணக்கில் மிதக்கவிடப்பட்டு இருந்தன.

உ) 2015 ஜுன் 24 ஆம் திகதி அரச கணக்கீட்டு சுற்றறிக்கையில் இலக்கம் 243/2015 5.1(இ) இற்கு அமைய பொது வைப்புக்கள் கணக்கிற்கு 2018 ஒக்டோபர் 22 ஆம் திகதி முதல் 2019 ஒக்டோபர் 04 ஆம் திகதி வரை கருத்திட்டத்தின் பொருட்டு கிடைக்கப் பெற்று இருந்த ரூபா 428,500 நிதி உரிய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு இருந்தது.

ஊ) மேற்போந்த சுற்றறிக்கையின் 5.1(ஆ) பந்திக்கு அமைய தொடராக பெற்றுக் கொள்ளப்படுகின்ற ஆயினும் உரிய வருமான இலக்கத்தை அடையாளப்படுத்தி இல்லாத பெறுகைகள் தொடர்பில் அரச நிதிக் கொள்கை திணைக்களத்திற்கு அறியக் கொடுதது தமது வருமான இலக்கத்தை பெற்றுக் கொள்ள வேண்டி இருப்பினம் பல வருட காலமாக தேசிய விஞ்ஞான அடிப்படையின் ஊடாக மிருக ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி தொடர்பில் வரவு வைக்கப்பட்டு இருந்த ரூபா 2,671,334 இற்கான வைப்பு தொடர்பில் அதற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு செலவு செய்யப்பட்டு இருந்தன. அதற்கு அமைய வரவு வைக்கப்படுகின்ற ரூபா 2,671,333 நிதி 2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 1,181,290 இற்கான மீதமாக காணப்பட்டது.

எ) வேறு நிறுவனங்களக்கு நிர்வகிக்கும் பொருட்டு உத்தியோகத்தர்களின் வேதனங்களில் இருந்து கழிவு மேற்கொள்ளப்பட்டு ரூபா 46,448 இற்கான மீதி தீர்க்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டு இருந்தது.

3. கண்காணிப்பு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை

-----------------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்டு இருந்த நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டு இருந்த வருமானம் செலவு சொத்து மற்றும் பொருப்புக்கள் தொடர்பில் செயற்பணி மிளாய்வு, நிலையான அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனித வள முகாமைத்துவத்திற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியியல் குறிப்பிடப்பட்டுள்ள 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கு அமைய சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கையில் உட்படுத்தப்படும்.

வை.எம்.சந்திரசேகர பண்டா
உதவி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வளர் நாயகத்திற்காக.